| Headline | A Baby Born With HIV Is Cured | | |
|---|---|---|---|
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 05 Mar 2013 | Color | Black/white |
| Section | News | Circulation | 28,000 |
| Page No | 8 | Readership | 180,000 |
| Language | Tamil | ArticleSize | 314 cm² |
| Journalist | N/A | AdValue | RM 773 |
| Frequency | Daily | PR Value | RM 2,319 |




# எச்.ஐ.வி. கிருமியுடன் பிறந்த சிசு குணமடைந்தது

**உலகின் முதல் சம்பவம்**


தலைமை ஆய்வாளரான டெபோரா பிரசாத்.

வாஷிங்டன், மார்ச் 5–

பிறக்கும்போதே எச்.ஐ.வி. கிருமிகளால் பீடிக்கப்பட்டிருந்த பச்சிளம் சிசுவொன்றைத் தாங்கள் குணப்படுத்தியிருப்பதாக மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். பிறக்கும்போதே அந்த நோய்க் கிருமிகளால் பீடிக்கப்பட்டுள்ள சிசுவொன்று குணப்படுத்தப்பட்டிருக்கும் முதல் சம்பவம் இதுவாகும்.

குழந்தையின் உடலிலிருந்து எய்ட்ஸ் நோயை உண்டாக்கக்கூடிய எச்.ஐ.வி. கிருமிகள் அடியோடு அழிக்கப்படாவிட்டாலும்கூட, அவற்றின் எண்ணிக்கை மிகவும் குறைக்கப்பட்டுள்ளது. அதனால், மருத்துவ சிகிச்சை எதுவுமின்றி இயல்பாகவே அக்குழந்தையின் உடல் அக்கிருமிகளைக் கட்டுப்படுத்தி வைக்க முடியும் என்று அந்த ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

உலகில் ஒரே ஒரு எய்ட்ஸ் நோயாளி மட்டுமே அந்நோயிலிருந்து முற்றிலும் விடுபட்டுள்ளதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கரான திமோதி பிரவுன் எனும் அந்த ஆடவருக்கு எய்ட்ஸ் நோயோடு ரத்தப் புற்றுநோயும் ஏற்பட்டிருந்தது. புற்றுநோயைக் குணப்படுத்துவதற்காக அவரின் உடலில் மற்றொரு நபரின் எலும்பு மஜ்ஜை செலுத்தப்பட்டது. எலும்பு மஜ்ஜை செலுத்தப்பட்டு ஐந்து ஆண்டுகள் கடந்த பின்னரும் அவரின் உடலில் எச்.ஐ.வி. கிருமிகள் காணப்படவில்லை. அதே வேளையில், ரத்தப் புற்றுநோயிலிருந்தும் அவர் மீண்டுவிட்டார். இதனால், எய்ட்ஸ் நோயிலிருந்து முற்றாக விடுபட்ட நபராக பிரவுன் கருதப்படுகிறார்.

ஆனால், பிறக்கும்பபோதே எச்.ஐ.வி. கிருமிகளுடன் பிறந்த சிசுவுக்குப் புதிய மருந்துகள் எதுவும் செலுத்தப்படவில்லை. மாறாக, வழக்கமாகப் பயன்படுத்தப்படும் மருந்துகளே அக்குழந்தைக்கும் பயன்படுத்தப்பட்டது. ஒரே வித்தியாசம் என்னவென்றால், அக்குழந்தை பிறந்த 30 நிமிடங்களுக்குள் அம்மருந்து செலுத்தப்பட்டது என்று அமெரிக்காவின் அட்லாண்டா நகரில் நடந்த 20ஆவது வருடாந்திர நோய்க்கிருமிகள் மீதான ஆய்வரங்கில் மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

பிறக்கும் சிசுக்களுக்கு எச்.ஐ.வி.கிருமிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டவுடன், சிகிச்சையைத் தொடங்கினால் அக்குழந்தையை அந்நோயிலிருந்து காப்பாற்ற முடியும் எனும் நம்பிக்கையை இது ஏற் படுத்தியுள்ளது. இப்போதைய சூழ் நிலையில் இந்த நோய்க்கிருமி களோடு பிறக்கும் குழந்தைகளுக்கு ஆயுட்காலம் முழுவதும் மருத்துவச் சிகிச்சைய ளிக்க வேண்டிவரும். அவ்வாறு இல்லாமல், உடனடியாகச் சிகிச்சையைத் தொடங்கினால், சிசுக்களை அந்த அவலத்திலிருந்து காப்பாற்ற முடியும் என்று அமெரிக்கா, பால்ட்டிமோரிலுள்ள ஜான்ஸ் ஹோப்கின்ஸ் சிறார் மருத்துவ மையத்தின் தலைமை ஆய்வாளரான டெபோரா பிரசாத் தெரிவித்தார்.

உடனடி சிகிச்சையளிக்கப்பட்ட சிசுவொன்று எச்.ஐ.வி. கிருமிகளின் பிடியிலிருந்து மீண்டிருக்கும் முதல் சம்பவம் இதுவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.எச்.ஐ.வி. நோய்க் கிருமிகளால் பீடிக்கப்பட்டிருந்த தனது தாயிடமிருந்து அக்குழந்தைக்கு அக்கிருமிகள் தொற்றின.

Powered by: MediaBanc
Be informed